Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
|---|---|

வேணு : 14 மார்ச் 2009 கானம் : 8



31-1-09 மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் 7வது ப்ரதிஷ்டா தின வைபவத்தில்

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.madhuramurali.org / www.namadwaar.org
Email:contact@namadwaar.org

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD


ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



பாகவத பவனத்தில்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே



ஃபிப்ரவரி 7, 2009 அன்று பூர்ணிமாஜி வாலாஜா மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடந்த கூட்டுப்ப்ரார்த்தனையில் கலந்து கொண்டு உரையாற்றினார்



05-2-2009 வாலாஜா தீனபந்து ஆஸ்ரமத்தில்



அதிசய வானரம் - விவரம் பக்கம் 13



10-2-2009 ஆம்பூரில் அன்னதானம் மற்றும் ராதாகல்யாணம்

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:14 மார்ச் 2009 கானம்:8



- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.


உள்ளே ...


| | |
|---|---|
| கீர்த்தனம் | 02 |
| மதுரமான மஹனீயர் - 157 | 03 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 06 |
| பாகவத பழம் -8 | 07 |
| ஸ்ரீநாராயண தீர்த்தர் | 10 |
| அதிசய வானரம் இது | 13 |
| விடை தெரியுமா | 23 |
| ப்ரம்மம் ஏகம் கீதைகள் அநேகம் | 24 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 27 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| மாலே மணிவண்ணா - 70 | 32 |
| அக்ஷரமணமாலை -155 | 35 |


ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

*People Speak of the Seven Wonders of the World. But, the real wonder is the way Mahatmas wander about in this world, despite being ever-immersed in the highest state of bliss.* -Sri Muralidhara Swamiji

# கீர்த்தனம்

ஜெயஸ்ரீ ராமக்ருஷ்ணன் -(Sydney ஆஸ்திரேலியா)



குருநாதா!

நெஞ்சுருகி நின்திருவடிதனை நாடி வந்தேன் நான்
பணியாத செருக்கதனை அழித்து எனையாட் கொள்வீரே
எப்பொழுதும் நின் திருஉரு எனுள் நிலைக்க அருள்வீரே
எந்நாளும் திரு நாமம் மறவா வரம் தருவீரே

கீழ்மையும் குற்றமும் குடிகொண்ட மனத்தினை
தூய்விக்க பல உபாயம் தேடி அலைந்து களைத்தேனே
மேன்மையும் கருணையும் நிரம்பிய நின் சன்னதி
அடைந்தபின் மார்க்கமறிந்து நிம்மதியை அடைந்தேனே

நின் அருகேவாசம் செய்யும் தவமெனக் கிலையெனினும்
சிந்தனையெனும் பாலம் நடந்து தினம்நினை நாடி வருவேனே
பேதையென்னை மகிழ்வுடனே காத்தருளும் நின் ப்ரேமையில்
மனங்கசிந்து உளம் வலித்து கண்ணீர் மல்க நின்றேனே

எத்தகுதியுமிலா யென்னில் எதனைத் தான் கண்டீரோ
தூய அன்பு வலை விரித்ததில் சிக்க வைத்து விட்டீரே
பயனொன்றும் உனக்கென்னால் இலையெனினும் குருநாதா
அகம் புகுந்தென் உள்ளுணர்வாய் வழிநடத்தும் பெருமானே

# மதுரமான மஹனீயர் – 157

(Dr. ஆ.பாக்யநாதன்)

சமீபத்தில், ஸ்ரீஸ்வாமிஜி ஆம்பூருக்கு சென்று அங்கு ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில் பாகவத உபன்யாசம் நிகழ்த்தினார். இதை, பல அன்பர்கள் கேட்டு பயனுற்றனர். அப்பொழுது ஆம்பூர் அன்பர் குமரேசன் என்னிடம் சில சுவையான சம்பவங்களை தெரிவித்திருந்தார்.



அவற்றில் சிலவற்றை, தங்களுடன் இங்கு, பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கோவில்களில் கொடுக்கப்படும் குங்குமமோ, விபூதியோ பகவானின் பிரசாதம் ஆகும். இதை பக்தியுடன் அணிபவர்களுக்கு நன்மைகள் பல ஏற்படுவது உறுதி. 'மந்திரமாவது நீறு' என ஞானசம்பந்தர் பாடி, மதுரை மன்னனின் உடல் நோயைத் தீர்த்தது நாம் அறிந்ததே. மகான்களிடம் நாம் பெற்றுக்கொள்ளும் பிரசாதமானது நமக்கு மட்டுமின்றி, நம்மை தொடர்பு கொள்வோருக்கும் நன்மை தரவல்லது.

மைதிலி என்பவர் ஆம்பூரை சேர்ந்தவர். இவரது கணவர் ஷமீர் சாக்ஸேனா டெல்லியில் வேலை பார்த்து வந்தார். 2002ம் ஆண்டு மைதிலியின் கணவர் ஒரு கார் விபத்தில் இறந்து விட்டார். அதன்பின், தனது இரு குழந்தைகளுடன் மைதிலி, சென்னையிலிருந்து சுமார் நூறு மைல் தொலைவிலுள்ள தனது பூர்வீக ஊரான ஆம்பூருக்கு வந்து குடியேறினார். மைதிலி ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்துள்ளார். மஹாமந்திரத்தையும் சதா சொல்லி வந்து கொண்டிருந்தார். ஆம்பூரில் நடக்கும் அனைத்து சத்சங்க நிகழ்ச்சிகளிலும் பக்தி சிரத்தையுடன் கலந்து கொள்வார். மைதிலி சுயமாக தையல் தொழில் செய்து வந்தார்.

அது சம்பந்தமாக தன்னிடம் வருவோரிடமும் மகாமந்திரத்தின் மகிமையை அவர் தவறாது எடுத்து கூறுவது உண்டு. ஒருமுறை திருமதி.கீதா தசரதன் என்பவர் அவரிடம் துணி தைப்பதற்காக வந்தார். வந்தவர் மைதிலியிடம், "தமக்கு திருமணம் ஆகி ஏழு வருடங்களாகியும் குழந்தை பேறு கிடைக்கவில்லை என்றும், பலவித வைத்தியங்களை செய்து பார்த்தும் விடிவு பிறக்கவில்லை" என்றும் கூறி வருத்தப்பட்டார். மேலும் சோதிடம் பார்த்து பரிகாரங்கள் செய்தும் பலன் ஏற்படவில்லை என்றும் கூறினார். அதைக்கேட்ட மைதிலி அவரிடம் "என்னிடம் மஹாரண்யம் ஸ்ரீஸ்வாமிஜியிடம் பெற்ற குங்குமம் இருக்கிறது. அது மிகவும் சக்தி வாய்ந்தது. அதை நீ அணிந்து வந்தால், சகல துன்பங்களும் நீங்கும்" என்று கூறி, மேலும் மகாமந்திரத்தின் மகிமையை கூறி, தினமும் அதை கீர்த்தனம் செய்து வரவும் கூறினார். இது மே 2008ல் நடந்தது. திருமதி.கீதாவும் அப்படியே அந்த குங்குமத்தை அவரிடமிருந்து பெற்று அணிந்து வந்தார். மேலும் மகாமந்திரமும் இயன்ற பொழுதெல்லாம் சொல்லி வரலானார். சிறிது நாட்கள் முன்பு மருத்துவர்கள் ஒரு மருத்துவ சோதனையின்பொழுது, திருமதி.கீதாவிடம், அவருக்கு குழந்தை உண்டாகியிருப்பதாக தெரிவித்தனர். ஆச்சரியமும் ஆனந்தமும் உற்ற அவர், உடனே மைதிலி அவர்களுக்கு நன்றியுடன் இதனை தெரிவித்தார். திருமதி. கீதா அவர்கள் ஸ்ரீஸ்வாமிஜியை சந்தித்ததே இல்லை என்பதுதான் இதில் மிகப்பெரிய ஆச்சரியம். தெய்வ ப்ரசாதம் பலனளிக்காமல் போகாது என்பதற்கு இதுவும் ஒரு சான்றன்றோ!



ஸ்ரீஸ்வாமிஜி ஆம்பூருக்கு சென்று அங்கு ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் பாகவத உபன்யாசம் நிகழ்த்திய பொழுது, அதை கேட்க வந்தவர்களில் ஆம்பூர் துரைசாமி தெருவை

சேர்ந்த திருமதி.லக்ஷ்மி அம்மாளும் ஒருவர். இறுதிநாளான பிப்ரவரி 10ம் தேதியன்று ராதா கல்யாண உற்சவம் நடந்தது. அன்று அன்னதானமும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதில் எவ்விதத்திலாவது பங்கு கொள்வோருக்கு இறைவனின் அருளும், வாழ்வில் பல நலன்களும் ஏற்படும் என்று பல அன்பர்கள் பேசி வந்ததைக் கேட்டார் திருமதி.லக்ஷ்மி அம்மாள். தாமும், தன்னாலான உபகாரம் ஏதாவது செய்ய வேண்டுமென நினைத்தார். அவரோ ஏழை. அதனால் அவரால் ஒன்றும் கொடுக்க முடியவில்லை. மனதோ ஏங்கியது. கல்லினுள்ளும் தேரைக்கு உணவளிக்கும் பெருமான், அவரது அவாவை பூர்த்தி செய்ய விரும்பினான் போலும்!. திருமதி.லக்ஷ்மி அம்மாள் வீட்டிற்கு சென்று, துணிமணிகளை எடுக்க பீரோவைத் திறக்க, ஒரு 500 ரூபாய் நோட்டு உள்ளிருந்து விழுந்தது. என்றோ வைத்தது போலும்; மறந்து இருக்கிறார். இன்று அன்னதானத்திற்கு கொடுக்க வேண்டும் என நினைக்கவே, தானாகவே கீழே விழுந்துவிட்டது. அதை அவர் பூரண மனதுடன் திரு.குமரேசனிடம் கொடுத்தார். அவர் வேண்டாம் என கூறியும், "இறைவனாக எனக்கு ஒரு நல்ல நிகழ்ச்சியில் பங்கேற்க வாய்ப்பளிக்கிறான். தட்டாமல் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார் திருமதி.லக்ஷ்மி அம்மாள். அது அன்னதானத்திற்கு உபயோகப் படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி என் மனதை மிகவும் நெகிழ்த்தியது. உங்களுக்கும்தானே?




19-02-09 ஆவடி யோக ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகத்தில்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

***கேள்வி :யாரிடமிருந்து பகவத் குணம் கேட்க வேண்டும்?***

பதில் : பகவத் குணம் கேட்பதாலேயே ஸமாதி கை கூடிவிடும். அதற்கு யாரிடம் கேட்க வேண்டும் என்றால், ஸமாதி கைகூடிய பிறகு ஸஹஜமாகி, யார் பகவத் குணம் சொல்ல வருகின்றார்களோ, அவர்களிடமிருந்து பகவத் குணம் கேட்டால், நமக்கு ஸமாதியே கைகூடி வரும். ஸ்ரீமத்பாகவதத்திலும் ஜீவன்முக்தராகவே பிறந்த சுகர், தன்னுடைய நிர்விகல்ப ஸமாதியை ஸஹஜ ஸமாதியாக்கி கொண்டு பரிக்ஷித்திற்கு பாகவதம் சொன்னார் என்பது கவனிக்கத்தக்கது.

***கேள்வி :பகவான் ரமணர் எண்ணங்கள் யாருக்கு வருகின்றன என்று பார் என்கிறாரே?***

பதில் : நாமும் அதைத்தான் சொல்கின்றோம். எண்ணங்கள் யாரால் வருகின்றன என்று பார் என்கின்றோம்.

***கேள்வி :பகவானை தர்சனம் செய்ய தியானம் தனியாக செய்ய வேண்டுமா? நாம ஜபமே போதுமா?***

பதில் : தியானம் என்பது என்ன என்பதை முதலில் என்னவென்று பார்ப்போம். மனதில், ஒரே ஒரு மூர்த்தியின் உருவத்தை விடாமல், மாற்றாமல், வேறு எதையும் சிந்தனை செய்யாமல் சிந்திக்க வேண்டும் என்பதே அது. இது உள்முகமான தியானம். ஒரே ஒரு மூர்த்தியின் உருவத்தை எதிரில் வைத்து அதை கண்களை திறந்தவாறே விடாமல் பார்த்து கொண்டிருப்பது வெளிமுகமான தியானம். ஆக வேறு எதையும் சிந்திக்காமல், ஒரே ஒரு உருவத்தை மட்டும், தான், உள்ளாகவோ வெளியாகவோ பார்ப்பதுதான் தியானம். அதுபோல் ஆயிரம் பேசாமல், ஒரே ஒரு ஜபத்தை மட்டும், விடாமல், மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பதும், தியானம்தான்.

***கேள்வி :உலகத்தில் அரியது எது?***

பதில் : பத்ரியிலிருந்து ராமேஸ்வரம் வரை எவ்வளவோ புண்ய நதிகள், க்ஷேத்ரங்கள், லட்சக்கணக்கான ஆலயங்கள்; இவைகள் கூட ஸுலபம்தான். ஆனால் வாழ்நாளில் பகவானை உணர்ந்த ஒரு மஹாத்மாவின் ஸங்கம் அரிதிலும் அரிதானது.

## *பாகவத பழம்* 8

– ஸ்ரீஸ்வாமிஜி

***தாஸ்யம்*** : தாஸ்யம் என்றால் இறைவனுக்குத் தொண்டு செய்தலாகும். தொண்டு செய்வது என்றால் என்ன? தியானம், யோகம், உபன்யாசம் போன்ற பிறர் மதிக்கக்கூடிய தொண்டைச் செய்வதை விட, அவனுடைய ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தப்படுத்த வேண்டும்; ஒட்டடை அடிக்க வேண்டும்; புல் செதுக்க வேண்டும்; அவனை எழுந்தருளச் செய்வதற்காக வாரைப் பிடித்துத் தூக்க வேண்டும்; தீவட்டி பிடிக்க வேண்டும். குடை பிடிக்க வேண்டும்; சாமரம் போட வேண்டும்; பூ பறிக்க வேண்டும்; பூ தொடுக்க வேண்டும்; பெருமாள் அமுது செய்யும் மடப்பள்ளியில் அரைத்துக் கரைத்துத் தரவேண்டும். தாஸ்யம் என்பதே, தனக்கு என்று பெருமையைத் தேடிக் கொள்ள வேண்டாம் என்பதற்காகச் செய்வதுதான்; பிறகு, அதிலும் பெருமையான கைங்கர்யம்தான் வேண்டுமென்பது அறியாமையே.



ஸ்ரீ ராமருடன் சென்று சேவை செய்தார் லட்சுமண ஆழ்வார். ஸ்ரீராமர் சொன்னதைக் கேட்டு சேவை செய்தார் பரதாழ்வார். அப்படிச் சேவை செய்த பரதாழ்வாருக்குச் சேவை செய்தார் சத்ருக்ன ஆழ்வார். அப்படி இறைவனுக்கும், அவருடைய அடியாருக்கும், அடியாருக்கடியாருக்கும் சேவை செய்ய வேண்டும். அப்படி சேவை செய்யும்பொழுது, ராகம், துவேஷம், கோபம், பொறாமை, போட்டி, கர்வம், இவற்றை விலக்கி

எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கின்றோம் என்ற பெருமையுடன், இத்தகைய பாக்கியம் கிடைத்ததே என்று நினைத்து நினைத்து சேவை செய்ய வேண்டும். ஒரு எலெக்ட்ரிகல் வேலை செய்பவன், வீடு, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, மயானம் என்று எங்கு அழைத்தாலும் சென்று வேலை செய்வான், அதுபோல், கோயிலில் அழைத்தாலும் வருவான். அதுபோல், நாமும் எங்கும் மணி அடிக்க தயாராக உள்ளோம்; கோவிலிலும் மணி அடிக்கின்றோம் என்றால், அது பகவானுக்குச் செய்யும் சேவை ஆகாது.

ஒரு ராஜாவிற்கு நேரிடையாக ஊழியம் செய்பவர்கள், ராஜாவின் மனையாளான ராணி, மகனான ராஜகுமாரன், மகளான ராஜகுமாரி இவர்கள் எத்தனை பெருமிதத்துடன் இருப்பார்களோ, அப்படி ஒரு பக்தன் இருக்க வேண்டும். பகவானுக்குச் சேவை செய்பவன், அழுது வடிந்து கொண்டோ, தாழ்வு மனப்பான்மையுடனோ, வயிற்று பிழைப்புக்காகவோ, புலம்பிக் கொண்டோ, விதியே என்றோ, கடமை என்றோ, அல்லது ஒரு தொழில் என்றோ, ஒரு கலை என்றோ, அலுத்துக் கொண்டோ, சோம்பேறித்தனத்துடனோ, பிறருக்காகவோ, பாவ புண்ணியத்திற்காகவோ, வெறுப்புடனோ செய்தால், அது தாஸ்யம் ஆகாது.

***சக்யம்*** : நாம் உலகத்தவரிடம் பேசுவோம். உறவினர்களிடம் பேசுவோம். நண்பர்களிடம் பேசுவோம். குழந்தை பள்ளியில் அன்று நடந்ததையெல்லாம் தாயாரிடம் சொல்லி மகிழும். நண்பரிடம் சொல்லிச் சிலர் மகிழ்வார்கள். அல்லது ஆறுதல் அடைவார்கள். பக்தனுக்கு நெருங்கிய தோழன் பகவான் ஒருவனே. தன்னுடைய குறை, நிறை, சுகம், துக்கம், மனதில் ஏற்படக்கூடிய எல்லா வருத்தங்களையும் பகவானிடம் மட்டுமே பகிர்ந்து கொள்வான். அப்படிப் பகிர்ந்து கொண்டதால்தான், அவர்களுடைய பாடல்கள், கீர்த்தனைகள், இவைகள் மூலம் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை ஊகிக்க முடிகின்றது. அதோடு மட்டும் அல்லாமல், அதைக்கொண்டு அவர்களுடைய சரித்திரத்தையும் நம்மால் அறிய முடிகின்றது.

இறைவனைத் தோழனாகக் கொள்ள வேண்டும் என்பது மட்டும் போதாது. இறைவனைத் தவிர வேறு யாரையும் தோழனாகக் கொள்ளவும்

கூடாது. பேசினால் இறைவனுடன்தான் பேச வேண்டும். இறைவன் உன்னுடன் பேசியதை, அவனுடைய சம்மதத்துடன்தான் பிறரிடம் பேச வேண்டும். அதுவே சத்சங்கம். சிவபெருமானுக்குச் சிறந்த தோழர் சுந்தரர்; ஹனுமாருக்குச் சிறந்த தோழர் துளசீதாசர்; கண்ணனுக்கு சிறந்த தோழன் அர்ஜுனன்; சம்சாரிகளான நமக்கு கண்களுக்குத் தெரிந்த தோழர் சத்குருநாதனே ஆவார். உண்மையான தோழனிடம் ஒளிவு மறைவே கூடாது. இத்தகைய ஒளிவு மறைவு இல்லாமல் தெய்வத்துடன் பழக வேண்டும் என்பதே இதன் சாராம்சம். தோழமையில் உதவியும் உண்டு; இது பரஸ்பரம். அதுபோல் சக்ய பாவத்திலும் உண்டு.

**ஆத்ம நிவேதனம் :** இதில் சொல்லுவதற்கோ, வர்ணிப்பதற்கோ ஒன்றும் இல்லை. காற்றில் பறக்கும் பஞ்சு போல், இறைவனின் இச்சைக்குப் பரிபூரணமாகக் கட்டுப்பட்டு இருப்பதே ஆத்ம நிவேதனம் ஆகும். இது பரிபூரணமான சரணாகதி நிலை; ஞானியினுடைய நிலை; சுகருடைய நிலை ஆகும். இது சித்திக்க வேண்டியது என்றாலும் கூட, சரணாகதி என்று கேள்விப்பட்டவுடன், செய்ய வேண்டும் என்று ஆசை வர, முயற்சித்து, முயற்சித்து, கீழே விழுந்து, எழுந்து, விழுந்து, எழுந்து, அல்ப சரணாகதி, மந்த சரணாகதி, மத்தியம சரணாகதி என்று ஒரு நாள் நம்முடைய சரணாகதி பரிபூரண நிலையை அடையும். "நான் ஒரு கருவி. அவன் இயக்குகின்றான் என்பது முதல் நிலை. அதை அனுபவத்தில் பரிபூரணமாக உணர்வது பரிபூரணமான சரணாகதியின் நிலை." அதுதான் ஆத்மநிவேதனம். -கனியும்

*சாதாரண சாதகன் பகவானை அடைய பலவிதமாய் முயற்சிக்கிறான். அவனுக்கு எதுவும் அனுபவம் ஆவது துர்லபமாக இருக்கிறது. ஆனால், அவதார புருஷர்களின் விஷயத்தில் பகவானே முயற்சித்து அவர்களுக்கு பூரண அனுபவத்தை அளிக்கிறான். அவர்கள் முயலாமலே கூட, அவர்களை அனுபவங்கள் தேடி வந்து விடுகின்றன. -ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

# ஸ்ரீ நாராயண தீர்த்தர்

கண்ணனைப் பற்றி அநேக பக்தர்கள் பிராந்திய மொழிகளிலே சுவையுற பாடியுள்ளனர். தமிழிலே ஊத்துக்காடு வெங்கடசுப்பைய்யர், கன்னடத்திலே புரந்தரதாசர், மராட்டியில் பாண்டுரங்க பக்தர்கள், ஹிந்தியிலே மீராபாய் என பல மொழிகளிலும் பாடல்கள் உண்டு. பல பக்தர்களின் பாடல்கள் ராக, தாளங்களுக்கு முக்கியத்துவம் தராமல் பொருட்சுவைக்கும், '**பா**'வத்திற்கும் பிரதான்யம் அளிக்கின்றன. இருப்பினும் சங்கீதத்திற்கும் தகுந்த இடம் அளித்து, பக்தியும் '**பா**'வமும் நிறைந்து பல மஹான்கள் பாடி உள்ளனர். தியாகராஜரின் கிருதிகள் இப்படிப்பட்டவையே. முத்துஸ்வாமி தீக்ஷிதரும், ச்யாமா சாஸ்திரிகளும் அப்படி பாடி உள்ளனர். வடமொழியிலே ஜயதேவர் பாடி உள்ள அஷ்டபதி மிகப் பிரசித்தி. தமிழ்நாட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வரகூர் எனும் கிராமத்தில் 250 வருடங்களுக்கு மேலாக இன்றளவும் கிருஷ்ண ஜனன உத்ஸவம் மிகவும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இதற்கு காரணமானவர்தான் ஸ்ரீ நாராயண தீர்த்தர். இவர் பாடியவையே க்ருஷ்ணலீலா தரங்கிணி. நாமஸங்கீர்த்தனத்திலும், சங்கீத சபைகளிலும் வெகுவாக பாடப்படும் இப்பாடல்கள் கண்ணனின் பாலலீலைகளை குறித்தே பாடப்பட்டு இருந்தாலும், விஷயமறிந்தவர்கள் இது ஸ்ரீமத் பாகவதத்தின் ஸாரம் என்கிறார்கள்.

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் வில்லாத்தூர் எனும் கிராமத்தில் நீலகண்ட சாஸ்திரி என்பவருக்கு மகனாக பிறந்தவர் நாராயண தீர்த்தர். இவருக்கு விவாஹமாகி இல்லறம் நடத்திக் கொண்டு இருந்தார். ஒருமுறை இவர் ஒரு ஆற்றை கடக்குங்கால், பெருவெள்ளம் ஏற்பட்டது. வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட இவர் நடுஆற்றிலேயே 'ஆபத்சன்யாசம்', மேற்கொண்டதாக சொல்வர். அதே சமயம், அவர் மனைவிக்கு மனக்கண் முன் தன் கணவர் சன்யாச தீக்ஷை பெற்று, காவி உடை தரித்து இருப்பதாக தெரிந்தது. நாராயணதீர்த்தர் வெள்ளத்திலிருந்து எப்படியோ தப்பி விட்டார். அவர் வீட்டிற்கு

> "நீ எழும்பொழுது, ஒரு விலங்கை பார்ப்பாய். அதை பின்தொடர்ந்து சென்றால், வலி தீரும்"

"நீ எழும்பொழுது, ஒரு விலங்கை பார்ப்பாய். அதை பின்தொடர்ந்து சென்றால், வலி தீரும்"

வந்தவுடன், அவர் மனைவி அவரிடம் "சன்யாசம் பெற்ற பின் ஏன் வீட்டிற்கு வந்துள்ளீர்கள்" என்று கேட்டாராம். இத்தனைக்கும் அவர் தனது மனைவியிடம் ஒன்றும் கூறவேயில்லை. அவ்வளவு சத்தியமான சங்கல்பம்!! மகான்கள், மனதால் சங்கல்பம் செய்த உடனேயே அது சத்தியமாகி விடுகிறது. பின்னர், இவர் தகுந்த குருவின் மூலம் முறைப்படி சன்யாஸ தீக்ஷை பெற்றார்.

குருவின் ஆணைப்படி க்ஷேத்ர யாத்ரை மேற்கொண்டார். திருப்பதி முதலான பல தலங்களுக்கும் சென்று பின்னர் தமிழ்நாட்டில் கும்பகோணம் ஒட்டி உள்ள கோவிந்தபுரம் வந்தார். அந்நாட்களில் அவரை ஒரு கடுமையான வயிற்றுவலி பிடித்திருந்தது. குரு சொல்படி, கோவிந்தபுரம் போதேந்திர ஸ்வாமிகளை தரிசிக்க வந்த இவர் கோவிந்தபுரம் வரும் முன், போதேந்திரர் ஜீவ சமாதி ஆகிவிட்டார். பின்னர் காவேரிப் பகுதிகளில் உள்ள பல க்ஷேத்ரங்களுக்கு இவர் சென்று வந்து கொண்டிருந்தார்.

பல க்ஷேத்ரங்களுக்கும் சென்று வந்தவாறு இருந்தபோதிலும், இவருக்கு வயிற்றுவலி தீராமல், கடுமையான உபத்திரவம் தந்தது. ஒரு சமயம் நடுக்காவேரி எனும் கிராமத்தில் சஞ்சரித்து வரும்பொழுது, அங்குள்ள ஒரு விநாயகர் கோவிலில் வயிற்று வலி தாளாமல் படுத்து உறங்கிவிட்டார். அப்பொழுது கனவில் கண்ணன் வந்து, "நீ எழும்பொழுது, ஒரு விலங்கை பார்ப்பாய். அதை பின்தொடர்ந்து சென்றால், வலி தீரும்" என்று அருளினான். விழித்து பார்த்தால், ஒரு பன்றி நின்று கொண்டிருந்தது.

விழித்தவுடன் பன்றியை பார்ப்பதே அபசகுனம். அதை பின்பற்றி செல்வதா? என யோசித்தாலும், பகவான் கட்டளை என்பதால், அதை மறுக்காமல், அந்த பன்றியை பின்தொடர்ந்து சென்றார். வெண்மையான நிறத்தில் இருந்த அப்பன்றி, சுமார் நான்கு கி.மீ. தூரம் தீர்த்தர் பின் தொடர, முன்னே சென்றது. அதன்பின் அவரால் களைப்பின் காரணமாக தொடரமுடியவில்லை. பன்றியோ, சட்டென அங்கிருந்த ஒரு கோவிலுள் நுழைந்து மறைந்து விட்டது. அது மறைந்தவுடன்,


வரகூர் பெருமாள் கோவில்

நாராயண தீர்த்தருக்கு அசரீரியாக, "என்னைத் தேட வேண்டாம். நான்தான் உன்னை அழைத்து வந்தேன்" என்று குரல் கேட்டது. அதைக் கேட்டவுடன், முன்பு வராக அவதாரம் எடுத்த பெருமாளே இன்று வராகமாக வந்து தம்மை ஆட்கொண்டது என்று தெளிவுற்றார் நாராயண தீர்த்தர். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார்.

பகவான் பக்தர்களை ஆட்கொள்வதே வினோதம்தான். அந்த கணமே அவருக்கு வயிற்றுவலியும் போய்விட்டது. வெண்ணைநல்லூரில் சிவபெருமான் அந்தணராய் சுந்தரர் முன் வந்து பின் கோவிலில் மறைவதும், அசரீரி வாக்காய் திருவதிகையில் அப்பருக்கு வயிற்றுவலியை போக்குவதும், நாராயண தீர்த்தர் வாழ்க்கை சம்பவங்களும், பகவான் லீலா விநோதன் என்பதை நினைவூட்டுகிறது.

பூபதிராஜபுரம் என்ற அந்த ஊர் 'வரகூர்' என்று அன்றிலிருந்து வழங்கப் பெற்றது. இந்த ஊர் கோவிலை அலங்கரிப்பவர் வெங்கடேச பெருமாள். இவர் நாராயண தீர்த்தருக்கு விஸ்வரூப தரிசனம் கொடுத்ததாக சொல்வதுண்டு. இவர் பாடும்பொழுது, இவருக்கு ராதாக்ருஷ்ணரின் சலங்கை ஒலிகள் தெளிவாக கேட்குமாம். இவர் மாசி மாதத்தில், சுக்ல அஷ்டமியில் திருப்பூந்துருத்தியில் ஜீவசமாதி அடைந்தார் என ஒரு சாரர் சொல்கின்றனர். அவர் ஜீவசமாதி அடைந்த இடத்தில் இன்று ஒரு மாமரம் உள்ளது. அவர் வரகூர் பெருமாளுடன் ஐக்கியமாகி விட்டார் என்றும் ஒரு சாரர் சொல்கின்றனர். நாராயண தீர்த்தர் பஜனை சம்பிரதாயத்தை வெகுவாக ஊக்குவித்து பலருக்கு குருவாக விளங்கினார். வரகூருக்கு சென்று பெருமாளை சேவித்து, நாராயண தீர்த்தரின் ஜீவசமாதியையும் தரிசித்து வந்தால் குருவருள் பெறுவது திண்ணம்.

(தொகுப்பு: அன்பர் குழு)

# அனுமன் கோவில் காக்கும் அதிசய வானரம்

கர்நாடக மாநிலத்தில் பெங்களூருக்கு 30மைல் தள்ளி ஹொஸக்கோட் எனும் ஊர் வருகிறது. இங்கிருந்து கோலார் போகும் வழியில் கொட்டிக்கரே என்று ஒரு கிராமம் நெடுஞ்சாலையில் வருகிறது. நெடுஞ்சாலை விஸ்தரிக்கும் பணிக்காக இந்த சாலையை பெரிதுபடுத்த முடிவெடுத்தனர் அதிகாரிகள். அப்பொழுது ஒரு அனுமன் கோவில் குறுக்கே இருப்பதாக பார்த்துள்ளனர். அந்த கோவிலை, இயந்திரம் கொண்டு இடிக்க முயன்றுள்ளனர். ஆனால் அங்கிருந்த ஒரு குரங்கு அந்த இயந்திரத்தை இயக்குபவரை தாக்கி, மிரட்டி துரத்தி விட்டது. அந்த இயந்திரத்தை இயக்கியவரோ, ஒரு



சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் இதை சொல்ல அவரும் கோவிலுக்கு வந்தார். அவரிடமோ, அக்குரங்கு மிகவும் சகஜமாகவும் நட்பாகவும் பழகியது. கையை பிடித்துக்கொண்டு இயல்பாக ஒரு ஸாது போல் நடந்து கொண்டது. அந்த அதிகாரிக்கு மிகவும் ஆச்சரியம். இந்த குரங்கிடம் ஏதோ விசேஷம் உள்ளது என்று மிகவும் பக்தியுடன் வணங்கி சென்று விட்டார் அந்த அதிகாரி.

> *கோவிலிற்கு பக்தியுடன் வருபவர்களை ஒன்றும் செய்யாமலிருக்கும் குரங்கு, அதை இடிப்பதற்கு முயற்சி செய்தால் மட்டுமே அப்படி செய்ய முயலுபவர்களை தாக்குகிறது.*

கோவிலிற்கு பக்தியுடன் வருபவர்களை ஒன்றும் செய்யாமலிருக்கும் குரங்கு, அதை இடிப்பதற்கு முயற்சி செய்தால் மட்டுமே அப்படி செய்ய முயலுபவர்களை தாக்குகிறது. கிட்டத்தட்ட கோவிலுக்கு பாதுகாவலன் போல சற்றும் எங்கும் நகராமல் அங்கேயே தவம் கிடக்கிறது. இந்த அதிசயத்தை பார்க்க வரும் கூட்டமானது மிகவும் அதிகம். சாலையின் இரு ஓரங்களிலும் நாற்சக்கர வாகனங்களை நிறுத்திவிட்டு மக்கள் குரங்கையும் கோவிலையும் சேவித்து விட்டு செல்கின்றனர்.

அந்த கோவில் அங்கு இருபது வருடங்களுக்கு முன்பு வந்துள்ளது. ஒரு குரங்கு அவ்விடத்தில் இருபது வருடம் முன்பு இறந்து விட்டது. பின்னர் பொதுமக்கள் ஒன்று கூடி, குரங்கை அனுமன் அம்சமாக **பா**வித்து, அங்கு ஒரு அனுமன் கோவிலை கட்டி வழிபட்டு வந்துள்ளனர்.

குரங்கின் சேஷ்டைகள் இதனிடம் தென்பட்டாலும், அது எல்லோரிடமும் ஒரே விதமாக பழகுவதில்லை என்பது அதிசயம்தான். சிலரை பார்த்தால் கையை தலை மேல் வைத்து ஆசி கூறுவது போல் செய்கிறது. சிலரையோ முறைத்து பார்த்து விரட்டி விடுகிறது. ஒருவருக்கும் ஆனால் இதுவரை அக்குரங்கு எந்த தீங்கையும் செய்ததில்லை. அதற்கு பழகுவதற்கு வேறொரு குரங்கு கிடையாது. மேலும் அதற்கு எஜமான் என்று ஒருவரும் இல்லை. அப்படி இருந்தும் அது அங்கே எப்படி வந்தது, ஏன் அங்கேயே இருக்கிறது என்பதெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

*அவரிடமோ, அக்குரங்கு மிகவும் சகஜமாகவும் நட்பாகவும் பழகியது. கையை பிடித்துக்கொண்டு இயல்பாக ஒரு ஸாது போல் நடந்துகொண்டது.*

வெகுநாள் முன்பு காஞ்சிபுரத்தில் இப்படி ஒரு ஆலயம் (குரங்கு புதைக்கப்பட்ட இடத்தில் அனுமன் ஆலயம்) வைக்க காஞ்சி மஹாஸ்வாமிகளிடம் ஆலோசனை கேட்ட பொழுது அவரும் அதற்கு ஒப்புதல் தந்தது மட்டுமல்லாமல், "நமது இந்தியாவில் தமிழ்நாட்டிலும் மகாராஷ்டிரத்திலும் விநாயகர் ஆலயங்கள் அதிகம். ஆனால் அநேகமாய் அனைத்து இடங்களிலும் கோவில் அதிகமாக கொண்டிருப்பவர் ஆஞ்சநேயர்தான். சொல்லப்போனால், இந்தியாவையே அவர் ஆக்கிரமித்துள்ளார் என்றால் அது உண்மைதான்" என்றும் அருளினார். மேலும் பெங்களூர் ராமமூர்த்தி நகர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் அமையும் முன் வானத்தில் கதையுடன் அனுமார் தோன்றியதை மதுரமுரளி வாசகர்கள் அறிவர். நடந்துள்ள சம்பவங்கள் அதை மெய்ப்பிக்கின்றன என்றால் மிகையில்லைதான்.

- பெங்களூர் ராமமூர்த்தி நகர்
சுந்தர ஆஞ்சநேயர்கோவில் ச்ரௌதிகள் நவீன்பட்

## சென்ற மாதத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்



ஜனவரி 31 - மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் ஆலய ஏழாவது பிரதிஷ்டா தின வைபவம் மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார். முதல் நாள் கீத கோவிந்த கீர்த்தனமும் மறுநாள் காலை ஸ்ரீஸ்வாமிஜியின் திருக்கரங்களால் திருமஞ்சனமும் நடைபெற்றது. பின்னர் அருளுரை ஆற்றுகையில் விட்டலாபுரம் பாண்டுரங்கன், ஸ்ரீரங்கம் பெருமாள், கோவிந்தபுர ஜகன்னாதர் ஆகிய தெய்வங்களுக்கும் தமக்கும் உள்ள தொடர்பு குறித்து சுவைபட பேசினார். திருப்பதி பெருமாளிடம் சகல தெய்வங்களும் கலந்திருப்பதை ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள் கூறியதை எடுத்துரைத்தார். திருப்பதி பெருமாள்தான் கல்யாணஸ்ரீனிவாச பெருமாளாக அவதரித்துள்ளார் என்றும் கூறினார். பிற்பகல் உற்சவருக்கு திருக்கல்யாண வைபவம் நடந்தது. பிப்ரவரி 6ம் தேதி உலக க்ஷேமத்தை உத்தேசித்து (தை மாத கடைசி வெள்ளிக்கிழமை) நடந்த திருவிளக்கு பூஜையில் சுற்றுப்புற கிராம மக்கள் சுமார் 150பேர் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி 4-10 - ஆம்பூர் ஸ்ரீனிவாசபெருமாள் கோவிலில் உபன்யாசம் (நடுவில் இருநாட்கள் தஞ்சை சென்றிருந்தார்.) ஆம்பூரில் இறுதி நாளன்று 2500நபர்கள் கூடி இருந்தனர். விமரிசையாக அன்னதானமும் ராதாகல்யாணமும் நடைபெற்றது. ஆம்பூரில் உள்ள விவேகானந்தா பள்ளிக்கு விஜயம் செய்தார். அங்கு மாணவர்கள் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில், கீதை பாராயணம் செய்தனர். அங்கு மாணவர்கள் சிலம்பாட்டம் மற்றும் யோகா பயிற்சிகளை செய்து காண்பித்தனர். ஆம்பூரிலுள்ள ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேக பணிகளை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். ஆம்பூரில் ராமர் மற்றும் க்ருஷ்ணர் கோவில்களுக்கும் சென்று தரிசனம் செய்தார். ஆம்பூரில் நடந்த அம்மன் கோவில் கும்பாபிஷேகத்திலும் கலந்து கொண்டார்.

5-2-2009 - வாலாஜா தீனபந்து ஆஸ்ரமத்திற்கு விஜயம் செய்து அங்கு தங்கி படித்து வரும் ஆதரவற்ற மாணவர்களுக்கு ஆசி வழங்கினார். அங்குள்ள அன்பர்களின் வீட்டிற்கு விஜயம் செய்தார். வாலாஜா வெங்கடேச பெருமாள்

கோவிலிற்கு சென்று பெருமாளை சேவித்து விட்டு அங்கு நடந்த பஜனையில் கலந்து கொண்டார். பிரதி வாரம் அருகில் சத்சங்கத்து அன்பர்களால் நாமகீர்த்தனம் செய்யப்பட்டு வரும் ஒரு பஜனை மடத்திற்கும் சென்று உரையாற்றினார். 08-2-2009 அணைக்கட்டில் மாணவர்களுக்கான கூட்டுப்பிரார்த்தனையில் ஸ்ரீஸ்வாமிஜி உரையாற்றினார். 9-2-2009 அன்று குடியாத்தத்தில் உள்ள சிவாவிஷ்ணு கோவிலுக்கு சென்று வந்தார். குடியாத்தம் அருகிலுள்ள முக்குன்றத்தில் வெகுநாட்களுக்கு பிறகு நாம கீர்த்தனம் செய்த பிறகு மழை பொழிந்தது; அங்கும் 9ம் தேதி சென்று வந்தார். 09-2-2009 அன்று, ரெட்டியூரில் அன்பர்களுடன் சேர்ந்து வீதிபஜனை நிகழ்த்தினார். 10ம் தேதியன்று அகரம் கஜேந்திர வரத பெருமாள் கோவிலில் கஜேந்திர மோக்ஷம் குறித்து உரையாற்றினார்.

15ம் தேதி அன்று, கொளத்தூர் ராகவாஸ்ரமத்தில் பகவான் யோகிராம்சுரத்குமார் ஆலய 7வது வருட நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டு உரையாற்றினார்.

திருவண்ணாமலை பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள் பலநாட்கள் வாசம் செய்த "சுதாமா" இல்லத்தை 20-2-09 அன்று பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைத்தார்.



சைதாப்பேட்டை ஸ்ரீநகர்காலனி வரசித்தி விநாயகர் கோவிலில் 13ம்தேதி முதல் மூன்றுநாட்கள் அருளுரை வழங்கினார்.

9-2-2009 குடியாத்தத்தில் மாணவர்களுக்கான கூட்டுப்பிரார்த்தனையில் ஸ்ரீஸ்வாமிஜி உரையாற்றினார்






10-2-2009 ஆம்பூர் விவேகானந்தர் பள்ளியில்



20-2-2009 பகவான் யோகிராம்சுரத்குமார் - "சுதாமா" திறப்பு விழா திருவண்ணாமலை





15-2-2009 (கொளத்தூர் ராகவாஸ்ரமத்தில்





09-2-2009 ஹெட்டியூரில் வீதி பஜனை

ஆம்பூர் உபன்யாசத்தின்பொழுது 10-02-2009





ஜனவரி31ம் தேதி தூத்துக்குடியில் திரு.ராமானுஜம்ஜி தலைமையில் மாணவர்களுக்கான கூட்டுப்பிரார்த்தனை நடந்தது.

The D Studio
www.dexterousinfo.com

Quality is never an accident

It is always the result of intelligent effort

dex mobile
www.dexmobile.com

dex gamez
www.dexgamez.com

- Mobile Data Security Systems
- Mobile Enhancement Utilities
- Multimedia Content Exchange
- 3d Multiplayer Games

Roblock

Theft Recovery System for
Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones

Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.

- SMS notification on SIM Change
- Recover contacts from lost phone
- Remote WIPE memory card
- Complete Stealth operations

contact@dexmobile.com Ph: +91 960019777




தஞ்சை பாமா ருக்மணி சமேத ஸ்ரீநவநீத க்ருஷ்ணன் ஆலயத்தில் பிப்ரவரி 7ம் தேதியன்று மாலை 6.45 மணி அளவில் நவநீதக்ருஷ்ணன் ஸ்வாமி மஹாமந்திரகீர்த்தனத்துடன் உள்புறப்பாடு கண்டருளினார். கோயில் வளாகத்தில் புணருத்தாரணம் செய்யப்பட்ட "பகவத்கீதா" மண்டபத்தை ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் தமது அருள்கரங்களால் திறந்து வைத்து ஸ்ரீக்ருஷ்ண பாலலீலைகள் பிரவசனம் செய்தருளினார்கள். திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

26-2-2009 அன்று மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் ஆஞ்சநேய ஸ்வாமியை நூதன பிரதிஷ்டை செய்தருளினார்கள். அதை தொடர்ந்து மாதுரீஸகீஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன் பூஜையும், அனுமத் ப்ரபாவம் குறித்து பிரவசனமும் செய்தருளினார்கள். பிரவசனத்தை தொடர்ந்து திவ்யநாம சங்கீர்த்தனமும், டோலோத்சவமும் நடைபெற்றது. மறுநாள்காலை மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு ப்ரபோதனம் செய்து, பக்தர்களுக்கு தீர்த்தப்ரசாதம் வழங்கினார்கள்.


## சனாதனப் புதிர் : பகுதி – 1

–ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)





1. குபேரன், ரதி, சீதளா தேவி, வாயு, யமுனை இவர்களது வாகனங்கள் என்ன?
2. அஸுரர்களின் குரு யார்? இவரது தாய் தந்தையர் யார்? இவரது மனைவிகளின் பெயர் என்ன?
3. சுக்ரன், சூர்யன் இவர்களது வாகனங்களின் விசேஷம் என்ன?



4. தேவலோகத்தில் இந்திரனது நாயின் பெயர் என்ன? இவளது இரண்டு பிள்ளைகள் எங்கு வேலையில் அமர்த்தப்பட்டு உள்ளன?
5. ராஜ வித்யா என்று எதைச் சொல்லுகிறார்கள்?
6. சதாவ்ரதம் என்று எது சொல்லப்படுகிறது? இதைப்பற்றி உயர்வாக எங்கே சொல்லப்படுகிறது?
7. சகதேவனின் மூன்று மனைவிகள், இரண்டு பிள்ளைகள் பெயர் என்ன? மஹாபாரதத்தில் மொத்தம் எத்தனை சகதேவர்களைப் பற்றி விவரங்கள் இருக்கின்றன?



8. ஸோமசூத்ரம் என்று எதைச் சொல்லுகிறார்கள்?
9. சுலபா என்ற சந்யாசினியைப் பற்றி மஹாபாரதத்தில் எங்கு காணப்படுகிறது?
10. சுனக்ஷேபனைப் பற்றிய விசேஷம் என்ன?

# பிரம்மம் ஏகம் – கீதைகள் அநேகம்–1

–ஆத்ரேயன்



பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் அருளிச் செய்தது, பகவத் கீதை. இது தவிர, முற்றும் துறந்த முனிவர்கள், சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்கள், மானிடன் கரையேற வேண்டும் என்ற நோக்கத்துடன் பல கீதைகளை அருளிச் செய்து இருக்கிறார்கள். 42 கீதைகள் வரை இருப்பதாகக் கேள்வி. கீதையின் பெயர், எங்கே காணப்படுகிறது என்ற சில விவரங்கள் மட்டுமே கீழே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இது முழுமையான அட்டவணை அல்ல. ஒரு முயற்சி செய்யப்பட்டு, இந்த முயற்சியில் 42 கீதைகள் தேடப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளைப் பற்றி இங்கே காணுவோம்.

### *1. பகவத் கீதை*

ஸ்ரீ க்ருஷ்ணர் அர்ஜுனனுக்கு போர்க்களத்தில் உபதேசித்தது. குரு, உற்றார், உறவினர்களைப் போர்க்களத்தில் பார்த்து தனது கடமையில் இருந்து தவற இருந்த தருணம் பகவான் அர்ஜுனனுக்கு 620 ஸ்லோகங்கள் மூலமாக தனது கடமையை உணர்த்திய நூல். மற்ற 20 ஸ்லோகங்கள், சஞ்சயன், திருதராஷ்டிரன், அர்ஜுனன் சொன்னவை. நாம் எல்லோரும் பகவத் கீதையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். சிலர் நன்றாக படித்து இருப்பார்கள். கோடியில் ஒருவர் படித்து உணர்ந்து நடைமுறையில் அனுசரித்துக் கொண்டும் இருப்பார். வேதத்தின் சாரம் உபநிஷத். உபநிஷத்தின் சாரம் கீதை.

இது மஹாபாரதம் - பீஷ்ம பர்வாவில் அத்தியாயங்கள் 25 முதல் 42 வரை காணப்படுகிறது. 18 அத்தியாயங்கள் - 700 ஸ்லோகங்கள் கொண்டவை. ஆதி சங்கரர், ராமானுஜர், மத்வர், நிம்பர்கரர், வல்லபர், ஆனந்த கிரி, வேதாந்த தேசிகர், ஜல தீர்த்தர், ஸ்ரீதரர், மதுஸூதனர், ராகவேந்திரர் இவர்கள் உரை/வியாக்யானம்/பாஷ்யம் இயற்றி இருக்கிறார்கள். இது சனாதன மதத்தின் சாரம்.

### *2. அவதூத கீதை*

இதை இயற்றியவர் அவதூத தத்தாத்ரேயர். இதை தத்த கீதை -

தத்த கீதா யோக சாஸ்த்ரம் என்றும் கூறுவர். இதில் அத்வைத வேதாந்தத்தின் சாரம் காணப்படுகிறது. இது 8 அத்தியாயங்கள் 271 ஸ்லோகங்களைக் கொண்டது. தத்தாத்ரேயர் அத்ரி முனிவரின் புதல்வர். இவரைப்பற்றிய குறிப்புக்கள் மார்க்கண்டேய புராணத்தில் இருக்கின்றன.

**3. அனு கீதை**

இது மஹாபாரதம் ஆஸ்வமேதிக பர்வாவில் காணப்படுகிறது. அத்தியாயங்கள் 16 முதல் 51 வரை 36 அத்யாயங்கள். அர்ஜுனன் குருக்ஷேத்ரப் போருக்குப் பிறகு பகவத் கீதையை மறந்துவிட்டபடியால், பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர் அர்ஜுனனுக்கு மறுபடியும் உபதேசிக்கிறார். இதில் அத்தியாயங்கள் 20 முதல் 34 வரை பிராஹ்மண கீதை என்று அழைக்கப்படுகிறது. பிரம்மஞானியான பிராமணன் தனது மனைவிக்கு உபதேசித்ததும் இதில் அடங்கும்.

**4. அஷ்டவக்ர கீதை**


இது 298 ஸ்லோகங்கள், 20 அத்தியாயங்களைக் கொண்டது. அஷ்டவக்ரன் கஹோல முனிவரின் புதல்வன். தனது தாயின் கர்ப்பத்தில் இருக்கும்பொழுது தந்தையின் தவறான வேத உச்சாரணத்தைக் கண்டு நகைத்ததால் தந்தை சாபமிட எட்டு கோணல்களுடன் பிறந்தான் அஷ்டவக்ரன். பந்தி என்ற அறிவாளி கஹோலரைத் தோற்கடித்து தண்ணீருக்குள் சிறை வைத்ததால், அஷ்டவக்ரர் ஜனகரது அரசவைக்குச் சென்று பந்தியைத் தோற்கடித்து தந்தையை மீட்டார். இதனால் சந்தோஷம் அடைந்த தந்தையின் ஆசியால் மதுபிலா நதியில் நீராடி கோணல்கள் இன்றி சுந்தர புருஷனாக வெளிவந்தார். இவர் இயற்றிய கீதையின் பெயர் அஷ்டவக்ர கீதை.

**5. ஈஸ்வர கீதை**

இது கூர்ம புராணத்தில் காணப்படுகிறது. உத்தர பாகத்தில் இருக்கிறது. 496 ஸ்லோகங்களைக் கொண்டது. சிவன், முனிவர்களான சனத்குமாரர், சனந்தனர், சனகர், ஆங்கிரஸ், பிருகு, கபிலர், வசிஷ்டர் மேலும் பதரிகாச்ரமத்தில் கூடியுள்ள முனிவர்களது கேள்விகளுக்கு பதில் அளித்து விளக்கம் தருகிறார். விஞானபிக்ஷு என்பவர் இதற்கு உரை எழுதி இருக்கிறார்.

(தொடரும்)

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

# பாலகர்களுக்கு ஒரு கதை



## <u>வினோபா செய்தது சரியே</u>

நமது தேசப்பிதா காந்தியடிகள் அகமதாபாத் அருகே சபர்மதி நதிக்கரையில் ஒரு ஆஸ்ரமம் நிறுவி கிட்டத்தட்ட 1917 முதல் அங்கேதான் வாழ்ந்து வந்தார். எளிமையான வாழ்க்கையும், சமத்துவமும் அவர் கடைப்பிடித்து வந்தார். ஒரு கொள்கையை கடைப்பிடித்து விட்டால், அதை முழுமையாக கை கொள்வது அவர் வழக்கம். அதுபோல், 'தனக்கு ஒரு நியதி, தன்னுடன் வாழ்வோருக்கு ஒரு நியதி' என்றும் அவர் இருக்க மாட்டார்.

தெய்வ நம்பிக்கை நிரம்பப் பெற்றிருந்த மகாத்மா காந்தி, ராம நாம பஜனையுடன், கூட்டு ப்ரார்த்தனை மேற்கொள்வது வழக்கம். அவரின் ஆஸ்ரமத்தில் அமைதியும், சாந்தியும் நிலவுவதை கண்டு, பலர் அவருடனே வந்து சேர்ந்து வாழத் தொடங்கினர். அப்படி வந்து சேருபவர்களை, ஆஸ்ரம வாழ்க்கைக்கு தயார்படுத்துவதற்கு அவர் சில முறைகளை கையாண்டார். அவை அனைவருக்கும் பொதுவாக இருக்கும். சமைப்பது, சுத்தம் செய்வது என எந்த வேலையாயிருந்தாலும் அனைவரும் அதில் ஈடுபடுவதாக இருக்கும்.

*இது விலைமதிப்பற்றது. ஏனெனில் அவளிடமிருந்ததே இதுதான். அதையே கொடுத்துவிட்டாளே*

ஒழுங்கு என்பதையே பிரதானமாக கொண்ட காந்தியடிகளின் வாழ்க்கை, மற்றொரு கோணத்தில் பார்க்கும்பொழுது, துயருற்றோரிடமும், நலிந்தோரிடமும் அன்பு பாராட்டுவதாக அமைந்திருந்தது. இதை அவருடைய சீடர்களிடமும் பார்க்க முடிகிறது.

இந்திய தேசிய விடுதலைக்காக நிதி திரட்டியபொழுது, ஒரு வயதான பெண்மணி, ஒரு செல்லாக்காசை காந்தியடிகளிடம் அன்பாக, 'இது என் பங்கு' என கொடுத்து விட்டாள். அருகிலிருந்த அன்பர் அது செல்லாக்காசு என, காந்தியோ "இது விலைமதிப்பற்றது. ஏனெனில் அவளிடமிருந்ததே இதுதான். அதையே கொடுத்துவிட்டாளே" என்றார்.

இப்படி மக்களின் எண்ண உணர்வுகளை புரிந்து கொண்டு செயல்பட்டார் காந்தியடிகள். இவருடைய பிரதான சீடர் ஆசார்ய வினோபாபாவே என்பவர். வினோபா அந்தண குடும்பத்தில் பிறந்தவர். இளமையிலேயே காந்தியின் கொள்கையால் கவரப்பட்டு, ஆஸ்ரம வாழ்க்கையை மேற்கொண்டவர். சமூக நலப்பணிகள் பல செய்த இவர், காந்தியடிகளுக்கு பின், அந்த ஆஸ்ரமத்தை பொறுப்பேற்று நிர்வகித்தவர். எந்த ஒரு மனிதரையும் தனது கொள்கைக்கு சம்மதிக்க வைப்பதில், வல்லவரிவர்.


> வினோபா பாவே செய்தது சரிதான். இனி அனைவரும் கழிப்பிடம் சுத்தம் செய்யும் வேலையை மேற்கொள்ள வேண்டும்

ஒருமுறை இவர் பூதான் எனும் சமூகப் பணிக்காக, ஒரு ஜமீன்தாரை பார்க்கச் சென்றார். ஜமீன்தாரோ இவரிடம் முரடாக, “நான் நிதி ஒன்றும் தர முடியாது” என்று கூறிவிட்டார். இதனால், சற்றும் மனம் தளராத வினோபாஜியோ, அவரிடம், “நான் தங்களிடம் பணம் கேட்டு வரவில்லை. நான் மேற்கொள்ளும் பணிகளில் உடன்வரத்தான் கேட்கிறேன்" என்றார். ஜமீன்தார் வேண்டாவெறுப்பாக சம்மதித்தார். சிறிது நாட்கள் இவருடைய தன்னலமற்ற தன்மையையும், தியாக புத்தியையும் பார்த்த ஜமீன்தார் இவருடைய பணிக்கு மாபெரும் உதவி புரிந்தார். இத்தகைய வினோபாஜி பற்றிய ஒரு உருக்கமான நிகழ்ச்சியை பார்ப்போம்.

அக்காலத்தில் சபர்மதி ஆஸ்ரமத்தில் மனித மலங்கள் என்பது மனிதர்களால் எடுத்து கொட்டப்படுவதாக இருந்தது. அன்று இந்தியாவின் பல கிராமங்கள் இப்படித்தான் இருந்தது. சபர்மதி ஆஸ்ரமத்தில் ஒரு வயதானவர் இந்த காரியத்தை செய்து வந்தார். அவருக்கு ஒருமுறை உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. ஆதலால் அவர், தனது பத்து வயதே ஆன பேரனை அனுப்பி வைத்தார். சிறுவனும் ஆஸ்ரமத்திற்கு வந்தான். வந்த சிறுவன், கழிப்பிடத்தை சுத்தம் செய்தான். சுத்தம் செய்த பின் அதை வாளியில் போட்டு தூக்க மிகவும் சிரமப்பட்டான். சிறுவனானபடியால், அவனால் அந்த வாளி




பளுவை தூக்க முடியவில்லை. செய்தாகவேண்டும்; ஆனால் செய்ய இயலவில்லை. என்ன செய்வான் அவன், பாவம்!. பதட்டத்துடன், அவன் அப்படி கஷ்டப்படுவதை கண்ட வினோபாஜி மனது மிகவும் வருந்தினார். சிறிதும் தாமதிக்காது, அந்த சிறுவனுடன் சேர்ந்து தானும் அந்த வாளியை தூக்கி சுத்தம்




செய்தார். அதை செய்த பின்னர்தான், அவர் மனம் சாந்தியை அடைந்தது. என்ன ஒரு அன்புள்ளம் பாருங்கள்! ஆனால், வினோபாஜி இந்த காரியத்தை செய்தது பலருக்கு பிடிக்கவில்லை. ஆதலால், அவரை மறுபடி ஆஸ்ரமத்துக்குள் யாரும் அனுமதிக்கவில்லை. அப்பொழுது காந்தியடிகள் ஆஸ்ரமத்தில் இல்லை. வெளியில் இருந்து காந்தியடிகள் திரும்பி வந்தபொழுது, அவரிடம் விவரங்களைக் கூறினர். காந்தியடிகள் வினோபாஜியை கண்டிப்பார் என அனைவரும் எதிர்பார்த்தனர். காந்தியடிகளோ, சிறிது நேரம் மௌனம் காத்து விட்டு, "***வினோபா பாவே செய்தது சரிதான். இனி அனைவரும் கழிப்பிடம் சுத்தம் செய்யும் வேலையை மேற்கொள்ள வேண்டும்***" என தீர்ப்பு வழங்கினார்.

பணிவு, அன்பு, இரக்கம், சமத்துவம் ஆகியவை நமது தேசப்பிதாவிடமும் அவரது சீடரிடமும் நிறைந்திருப்பதை நம்மால் காண முடிகிறதல்லவா, பாலகர்களே?



## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

*- ஜனனி*

கண்ணன் பல நாட்கள் பக்தி செய்தும், தரிசனம் தராததால், கண்ணனிடமே மிகுந்த கோபம் கொண்டார் க்வாரியா பாபா. இதைத் தொடர்ந்து க்வாரியா பாபா பகவன் நாமத்தை உச்சாரணம் செய்வதையும் நிறுத்திவிட்டார். ராஸ லீலைகளுக்கும் கோவில்களுக்கும் செல்வதையும் நிறுத்திவிட்டார். இது மட்டும் அல்ல! கோவில்களின் வாஸலில் நின்றுக் கொண்டு உள்ளே செல்லும் ஸேவார்த்திகளிடடம் "ஐயா! சற்று நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களது மனநிம்மதியை இழக்கக் கூடாது என்ற இச்சை உங்களுக்கு இருக்குமானால், தயவு செய்து இந்த கண்ணனுடன் எந்த ஸம்பந்தத்தையும் வைத்துக் கொள்ளாதீர்கள். அவன் கல்நெஞ்சு படைத்தவன். சற்றும் நம்பத் தகாதவன். எப்பொழுதும் கோபிகைகளுடன் விளையாடுவதே அவனுக்குத் தெரியும். மற்றவர்களைப் பற்றி அவன் சற்றும் கவலைப்பட மாட்டான்" என்று பலவாறு கூறி அவர்களை கோவிலுக்குச் செல்லவிடாமல் நிறுத்திவிடுவார் பாபா!

> *'நிறுத்து! போதும் இந்த பேச்செல்லாம். உனக்கு வேண்டும் என்றால் எனக்கு நீ முன்பே தரிசனம் தந்திருக்க மாட்டாயா? நீ ஏனப்பா வருகிறாய்? நீயோ வ்ரஜ யுவராஜன். நானோ ஒரு பரதேசி! என்னிடம் உனக்கு என்ன இருக்கிறது?*

ஒரு ஸாயங்கால வேளையில் பாபா ரமண்ரேதியில் அலைந்து கொண்டிருந்தார். அப்பொழுது அருகிலிருந்த காட்டிலிருந்து ஒரு பெரிய பசுவின் கும்பல் வருவதைக் கண்டார். இதைத் தொடர்ந்து அங்கு சுற்றுச்சூழலே திடீரென்று ஒரு நீல ஒளியால் நிரம்பியது. அந்த ஒளி ஒரு பாலகனிடமிருந்து பரவிற்று. அந்த பாலகன் மிகவும் அழகாக இருந்தான். அவனது குழலிலிருந்து எழுந்த வேணுகானம் பாபாவை என்னவோ செய்தது. தலையில் அவன் மயிலிறகை அணிந்திருந்தான். அவனது சுருள்சுருளான கேசம் புஷ்பங்களினால் நன்கு

அலங்கரிக்கப்பட்டிருந்தது. உலகத்தையே மயக்கக்கூடிய மந்தஹாஸம் உடைய அந்த பாலகனை பார்த்தவுடனே பாபாவிற்கு இவன் தான் நமது 'நண்பன்' என்று தெரிந்துவிட்டது.

தனது சபதத்தை முற்றிலும் மறந்து 'ஹே நண்பா' என்று தன் இரு கைகளையும் உயர்த்தியவாறே கண்ணனிடம் ஓடினார் பாபா.



கண்களை விரித்து கண்ணீர் பெருக்குடன் அவனையே நோக்கியவாறு இருந்தார். க்ருஷ்ணனும் பரம ப்ரேமை பொருந்திய விழிகளுடன் அவரையே நோக்கினான். இருவரும் ஒருவரை ஒருவர் இறுக்க அணைத்துக் கொண்டனர். வெகுநேரம் ஆலிங்கனம் செய்தபடியே இருந்தனர். பிறகு கண்ணன் பாபாவிடம் 'க்வாரியா! ஏன் இவ்வளவு தாமதம்? எவ்வளவு நேரம் உன்னைக் காண்பதற்காக தவித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா?' என்று கேட்டான்.

இப்படி கேட்டதும் பாபாவினுடைய புண்பட்ட மனது தூண்டப்பட்டு விட்டது. 'நிறுத்து! போதும் இந்த பேச்செல்லாம். உனக்கு வேண்டும் என்றால் எனக்கு நீ முன்பே தரிசனம் தந்திருக்க மாட்டாயா? நீ ஏனப்பா வருகிறாய்? நீயோ வ்ரஜ யுவராஜன். நானோ ஒரு பரதேசி! என்னிடம் உனக்கு என்ன இருக்கிறது? என்று கூறி கண்ணனை விட்டு நடக்கலானார்.

பகவானோ 'க்வாரியா! மீண்டும் எப்பொழுது சந்திக்கலாம்?' என்று கேட்டார். பாபா 'நீ எப்பொழுது இஷ்டப்பட்டாலும் என்னை பார்க்கலாம். நான் இந்த வ்ரஜத்தை விட்டு வேறு எங்கும் செல்வதில்லை!' என்றார். இந்த ஸம்பவத்திற்குப்பின் ஒரு புதிய அத்யாயம் தொடங்கியது. அதை இனி வரும் இதழ்களில் பார்ப்போம்

(தொடரும்)

## *மாலே மணிவண்ணா – 70*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

**உலக உயிர்களின் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமும்**

எம்பெருமானால் உண்டானவை. எல்லாம் அவர்; அவர் இல்லாமல் எதுவும் இல்லை. இந்தக் கருத்தையே விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் முதல் இரண்டு திருநாமங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

விச்வம் என்பதனால் உலகமாகவே எம்பெருமான் இருக்கிறார் என்று காட்டி, விஷ்ணு என்ற திருநாமத்தால் உலகின் உள்ளும் வெளியும் பரவியிருப்பவர்; எங்கும் நிறைந்திருப்பவர் என்றார். உலகு விஷ்ணுவுக்குள் வியாப்பியம். உள் அடங்கியது - உலகினுக்குள் விஷ்ணு வியாப்பியம் என்னும்போது விஷ்ணு வியாபகமாகவும் வியாப்பியமாகவும் உள்ளவர் என்பது விளங்கும். விச்வத்தின் (உலகத்தின்) உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருப்பதால் (வியாபித்திருப்பதால்) அவர் விஷ்ணு எனப்படுகிறார்.

தன்னால் தோற்றுவிக்கப்பெற்ற பொருள்கள் அனைத்திலும் தன் சக்தியைச் செலுத்தி நிலைப்படுத்தியிருப்பதால் பொருள்களுக்கும் பகவானுக்கும் உள்ள தொடர்பு வெளியாகும். விஷ்ணுவின் சக்தி உட்சென்று (ஒவ்வொன்றிலும் சென்று) விஷ்ணு வியாபித்திருப்பதனால்தான், அவை அனைத்தும் ஆற்றலுடன் விளங்குகின்றன.

"விஷ்ணுநா வித்ருதே பூமீ இதி வத்ஸல்ய வேதநா" "விஷ்ணு தான் தன் சக்தியைச் செலுத்தித் தாங்குகிறார்; இப்படி வத்ஸர் என்பவர் கண்டறிந்துள்ளார்" என்று தைத்ரீய ஆரண்யகம் கூறுகிறது.

பொருளின் தன்மை கண்டு அது எதிலிருந்து தோன்றியது என்பதனை அறிவதுபோல இப்பொருள்களின் தன்மை கண்டு இவை அனைத்தையும் பகவானுடையதென அறியலாம். இதனையே நம்மாழ்வார் திருவாய்மொழியில்

"அடங்கு எழில் சம்பத்து அடங்கக் கண்டு ஈசன்
அடங்கு எழில் அஃது என்று அடங்குக உள்ளே" (திருவாய்மொழி 1:2.7)

என்று அருளிச் செய்தார்.

இனி, இந்தப் பரிபாடற் பகுதியின் கருத்தைத் திருவாய்மொழியில் நம்மாழ்வார் அருளிச் செய்தவாறும் காணலாம்

"இவையும் அவையும் உவையும் இவரும் அவரும் உவரும்
எவையும் எவரும் தன்னுள்ளே ஆகியும் ஆக்கியும் காக்கும்
அவையுள் தனிமுதல் எம்மான கண்ணபிரான் என் அமுதம்
சுவையன் திருவின் மணாளன் என்னுடைச் சூழல் உளானே"

(திருவாய். 1:9.1) பரிபாடற் கருத்தை ஆழ்வார் பாசுரம் அரண் செய்கிறது.

## கருடக்கொடி

அடுத்து எம்பெருமானது கருடக் கொடியைப் போற்றிசைக்கிறது பரிபாடல்.

36. சேவல் ஓங்கு உயர்கொடி யோயே!

கருடனாகிய ஓங்கி உயர்ந்த கொடியை உடைய பெருமானே!

என்று பகவானை அழைக்கிறது பரிபாடல்.

சேவல் என்னும் பெயர் பறவைகளில் ஆணுக்குப் பொதுப்பெயர் ஆயினும், ஆற்றலாலும், பகவானுக்குரிமையாலும் சிறப்பாகக் கருடனைக் குறிக்கலாயிற்று.

"சேவல் ஓங்கு உயர் கொடி" எம்பெருமானே! நின்னுடைய ஓங்கி உயர்ந்த கொடி, சேவல் ஆகிய கருடன் ஆகும். "நின் ஒன்று உயர்கொடி பனை" நின்னுடைய உயர்ந்த கொடிகளில் ஒன்று பனை (மரம்) ஆகும். பலராமனுக்குப் பனைக்கொடி உரியது.

பரிபாடலின் முதற்பாட்டினுள் ஒருகுழை ஒருவன் என்று பலராமனைக் குறித்தது காண்க. சங்ககாலக் கடவுட் கொள்கையுள் கண்ணன், பலராமன் இருவராகத் திருமால் வழிபடப் பெற்றவர். அதனால் பலராமனது பனைக்கொடியையும் கருடக் கொடியுடன் சேர்த்துப் பரிபாடல் காட்டுகிறது - பலராமனது ஆயுதமாகிய கலப்பையும் (நாஞ்சில்) கொடியாக அடுத்துச் சொல்லப் பெறுகிறது.

"நின் ஒன்று உயர் கொடி நாஞ்சில்" என்கிறது பரிபாடல். "நின் ஒன்று உயர் கொடி யானை" என்று பகவானுக்கு யானைக் கொடியும் உண்டு என்கிறது பரிபாடல். கம்சனால் ஏவப்பட்ட 'குவலயாபீடம்'

என்னும் யானையை அடக்கிச் சென்றமையால் யானைக் கொடியும் கண்ணனாகிய திருமாலுக்கு உரியதாயிற்று.

ஆக கருடன், பனை, யானை என்று பல்வேறு கொடிகள் இருந்தாலும் கருடக் கொடிக்குச் சமானமாக எந்தக் கொடிகளும் வருதற்குரியன அல்ல என்கிறது பரிபாடல். எல்லாவற்றோடும் ஒன்றாமல் தனித்துச் சிறந்து விளங்குவது உவணக் (கருடக்) கொடியே என்பதை "நின் ஒன்றா உயர் கொடி ஒன்றின்று" என்னும் அடியால், நின் ஒன்றாக உயர்ந்த கொடியாகிய கருடக் கொடியோடு பிற கொடிகள் ஒரு நிகராக வைக்கப்படா என விளக்கிக் கருடக் கொடியே சிறந்து நிற்பது என்கிறது பரிபாடல்.

இனி, கருடனின் சிறப்பை மேலும் பரிபாடல் விளக்கும் அழகைக் காண்போம்.

(தொடரும்)

SRI HARI:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

**M/s. Zaah Technologies India Pvt. Ltd.,**
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313

**E-mail:** contact@zaahindia.com

பார்த்தருண் மாலற பார்த்திலையெனினருள்
பாருனக்கார் சொல்வர் அருணாசலா

அருணாசலா, நீ என்னை பார்த்து அருள் செய்து, எனது மனமயக்கத்தை நீக்கவில்லையெனில், என் பொருட்டு, உன்னிடம், (எனக்காக, உனது அருள் பெறும் பொருட்டு) யார் பேசுவார் என இப்பாடல் பொருள் தருகிறது. குரு என்று ஒருவர் ரமண மகரிஷிகளுக்கு இல்லையாதலின், இப்படி பகவானிடமே ப்ரார்த்தனை செய்வது போல் அமைந்துள்ளது.

உத்தம குருவாக இருந்தால் பகவானிடம் சிஷ்யன் பொருட்டு எடுத்து பேசி சிஷ்யனின் எவ்விதமான மனக்கலக்கத்தையும் பூரணமாக தீர்த்து வைக்க முடியும். (விவேகானந்தரின் குடும்பம், அவர் தந்தை இறந்த பின் மிகவும் வறுமையில் வாடியது. அதை விவேகானந்தர் தனது குருவான ராமக்ருஷ்ண பரமஹம்ஸரிடம் சொல்லி முறையிட, அவரோ தனது சீடருக்காக , தனது தெய்வமான காளியையே அவரிடம் பேச வைத்தார். ஆதிசங்கரர் காலடியில் பிக்ஷைக்காக செல்லும்பொழுது, ஒரு ஏழை பெண்மணி ஆதிசங்கரரின் பிக்ஷா பாத்திரத்தில் போட தன்னிடம் ஏதும் இல்லையே என வருந்தி, தன்னிடமிருந்த ஒரே ஒரு நெல்லிக்கனியை போட்டார். அம்மாதுஸ்ரீயின் மனவோட்டத்தை பார்த்த ஆதிசங்கரர், அவளுக்காக திருமகளை ப்ரார்த்தித்து செல்வமழையையே பொழிய வைத்தார். இவை சீடனின் பொருட்டு தெய்வத்திடம் குருவானவர் எடுத்து பேசமுடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.)

குருவின் பெருமை எத்தகையது என்றால், பகவானையே நேருக்கு நேர் பார்த்து அருள் பெற்றவர்களும் கூட அத்தகைய பகவானை "குருவாக வந்து அருள்வாய்" என்கின்றனர். அக்ஷரமணமாலையிலும் கூட "குருவுருவாயொளிர் அருணாசலா" என்று பாடியிருப்பது நினைவில் கொள்ளத்தக்கது.

(தொடரும்)




A new book of Sri Swamiji is being released by CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA on 23rd feb 2009. **"BHAKTA MEERA - DIVINE LIFE OF MOTHER MEERA" - IN ENGLISH**

***'Bhakta Meera'*** - The original discourse of Sri Muralidhara Swamiji in Tamil has been recorded verbatim by those fortunate devotees who, ever reside in the shadow of His Holy feet. It has been translated in English and presented in the current format titled 'Bhakta Meera' Divine life of Mother Meera by Dr.A.Bhagyanathan, Personal Secretary to His Holiness Sri Sri Muralidhara Swamiji.

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மார்ச் 7, 22 | ஏகாதசி - மதுரபுரி ஆஸ்ரமம் |
| மார்ச் 28, 29 | தஞ்சாவூர் ராதாகல்யாணம் |
| ஏப்ரல் 3 | ராமநவமி |
| ஏப்ரல் 5 | ஏகாதசி - மதுரபுரி ஆஸ்ரமம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : 044-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.